TAMIL NADU HIGHWAY ENGINEERS NEWS

Price Rs. 10/- (Tamil & English Monthly Magazine) தனிப் பிரதி ரூ. 10/-

ஆண்டு 36	செப்டம்பர் 2026	இதழ் 09
Volume 36	SEPTEMBER 2026	Issue 09

மதுரையில் 69-வது பொதுக்குழுக் கூட்டம்!

நாள் : 17.10.2026

அனைவரும் வருக!!!

(அறிவிக்கை உள்ளே)

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

35v, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

தொ. பே. எண் : 044 - 2230 0190, தொ. அ. எண். 044 - 2230 0190

website : www.tnhighwaysengineers.com, e-mail : atnhe.chn15@gmail.com

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAY ENGINEERS
35V, Taluk Office Road, Saidapet, Chennai – 600 015

NOTICE TO THE MEMBERS

Notice is hereby given that the 69th Annual General Meeting of the members of the Association of Tamil Nadu Highway Engineers will be held as detailed below, for transacting the following business and for participating in the Threefold Celebration (முப்பெரும் விழா) of the Association of Tamil Nadu Highway Engineers.

THREEFOLD CELEBRATION (முப்பெரும் விழா) OF THE HIGHWAYS ENGINEERS ASSOCIATION

The Annual General Meeting will be held in conjunction with the following special programmes:

1. 69th Annual General Body Meeting
2. Presentation of Mementos to Former Office-Bearers in recognition of their valuable service and contribution to the Association
3. Welcome Ceremony for Newly Appointed Assistant Engineers to mark their entry into the Highways Department and the Association

PROGRAMME DETAILS

Day	**:**	**Saturday**
Date	**:**	**17.10.2026**
Time	**:**	**10.01 A.M**
Venue	**:**	**RR Mahal,** **Pandikoil Ring Road,** **Madurai - 625 020**

ORDINARY BUSINESS

To receive, consider and adopt the Audited Accounts of the Association for the financial year ended 31.03.2026 in respect of:

(i) General Fund
(ii) Building Fund

SPECIAL BUSINESS

To place before the Annual General Meeting the draft resolutions, if any, submitted by the members for consideration and adoption as Special Resolutions.

Members are requested to send any relevant subject for discussion, along with the draft resolution, to the Association Office at Chennai so as to reach the office on or before 01.10.2026. Draft resolutions received after the above time limit will not be considered.

ELIGIBILITY TO ATTEND THE ANNUAL GENERAL MEETING

(I) Members who register their attendance during the registration period, i.e., between 9.00 a.m. and 10.00 a.m. on 17.10.2026, alone will be eligible to attend the meeting.

(ii) All transactions of the Annual General Meeting shall be carried out strictly in accordance with the Bye-Laws of the Association.

ENROLMENT OF NEW MEMBERS

Enrolment of new members will also be facilitated during the meeting. Newly enrolled members will be eligible to participate in the Annual General Meeting, subject to the Bye-Laws of the Association.

All members are requested to participate in the 69th Annual General Meeting and the Threefold Celebration in large numbers and make the programme a grand success.

Station : Chennai-15
Date : 05.09.2026

Er. S.Pandian
Vice President

Er.P.Veeramani
General Secretary

தலையங்கம்

அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்!

சங்கக் கட்டிடம் தொடர்பான ஆய்வு மற்றும் விசாரணை:

கண்காணிப்புப் பொறியாளர் **பொறிஞர் C.A.திலகவதி** அவர்கள் தலைமையிலான குழுவினர், சங்கக் கட்டிடப் பணிகள் முறையாகவும், விதிமுறைகளுக்கு உட்பட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து இரண்டு கட்டங்களாக ஆய்வு மற்றும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது

சங்கத் தலைவரின் ராஜினாமா:

இதற்கிடையில், உறுப்பினர்களால் இளம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட **பொறிஞர் சே. இராமநாதன்** அவர்கள் தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது சங்க உறுப்பினர்கள் அனைவரிடையிலும் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

சங்கக் கட்டிடம் தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் நிலவி வந்த நிலையில், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும், சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடம் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும் என்பதையும், கடந்த கால நிர்வாகத்தில் ஏதேனும் தவறுகள் அல்லது குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால், அவற்றை ஆய்வு செய்வதற்காக உரிய குழுவை அமைத்து, சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமாகத் தீர்வு காணலாம் என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இவ்விவகாரத்தில் தங்களுக்கு உடன்பாடு இல்லையெனில், அதனைத் தவிர்த்து, சங்கத்தின் பிற முக்கியப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, செயற்குழு உறுப்பினர்களுடன் இணைந்து தொடர்ந்து செயல்படலாம் என்றும் அவரிடம் வலியுறுத்தப்பட்டது.

எனினும், செயற்குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயல்படுவதற்கு தனது மனம் ஒப்பவில்லை என்ற காரணத்தைத் தெரிவித்து, தனது பதவியை ராஜினாமா செய்வதாக அவர் WhatsApp குழுவில் தெரிவித்திருந்தார். மேலும், இது தொடர்பாக முதன்மை இயக்குநர் அவர்களுக்கும் கடிதம் அனுப்பி, அதன் நகலை பொதுச் செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

ஏற்கெனவே, தலைவர் ஒப்புதலுடன் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்ட, 05.09.2026 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இவ்விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. நீண்ட நேரம் நடைபெற்ற விவாதத்திற்குப் பிறகு, வேறு வழியில்லாத நிலையில், அவரது ராஜினாமா கடிதத்தை செயற்குழு வருத்தத்துடன் ஏற்றுக்கொண்டது.

புதிய நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மை:

இதுவரை நாம் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையின் (System) கீழ் பணியாற்றி வந்துள்ளோம்.

தற்போது புதிய ஆட்சியில், நடைமுறைகளில் தேவையான மாற்றங்களை கொண்டு வந்து, அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடனும் முறையாகவும் செயல்படுத்தப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே, புதிய அமைப்பு முறையை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

Online Payment System மற்றும் eMBook

தற்போது Online Payment System with eMBook 01.04.2026 முதல் நடைமுறையில் இருப்பதால், அதில் Impress System-ஐ நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பொறியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பான நடவடிக்கைகள்

இதுதொடர்பாகவும், பொறியாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அனைத்து மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் முதன்மை இயக்குநர் அவர்களிடமும் சங்கத்தின் சார்பாக எடுத்துரைத்துள்ளோம்.

இத்தகைய சூழ்நிலையில், உதவிப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை அனைத்து நிலைகளிலும் உள்ள பொறியாளர்கள் ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டால் மட்டுமே, நமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைத்து, அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதால் எந்தவிதமான பயனும் ஏற்படாது. மாறாக, நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள செயற்குழு உறுப்பினர்கள், தங்கள் மண்டலப் பொறியாளர்களுடன் இணைந்து, அவர்கள் தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்து, அவற்றை முறையாக உரிய அதிகாரிகளிடம் எடுத்துரைக்க வேண்டும்.

தனிச் சங்கம் குறித்த விவாதம் - சங்கத்தின் நிலைப்பாடு:

உதவிப் பொறியாளர்களுக்கென தனிச் சங்கம் அமைப்பது குறித்து விவாதிக்கப் பட்டதாகத் தெரிய வருகிறது.

தற்போது செயல்பட்டு வரும் சங்கம், முன்பு தலைமைப் பொறியாளர்களால் வழிநடத்தப்பட்டு வந்த நிலையில், அப்போதைய உதவிப் பொறியாளர்களால் பொறுப்பேற்று, "யார் வேண்டுமானாலும் பொறுப்பேற்று செயல்படலாம்" என்ற நோக்கத்துடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அந்தக் காலகட்டத்தில், சங்கத்தின் முக்கியப் பொறுப்புகளான தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் பதவிகளை தலைமைப் பொறியாளர்களே வகித்து வந்தனர்.

சங்கத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் போது, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட்டு, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சங்கத்தின் வழக்கமான நடைமுறையாக இருந்து வருகிறது.

தனிநபர் நலன் மற்றும் பிரச்சினைகளின் தன்மையைக் கருத்தில் கொண்டு, சில விவரங்களைப் பொதுவெளியில் பதிவிடுவதை சங்கம் தவிர்த்து வருகிறது. எனவே, உறுப்பினர்கள் தங்களது பிரச்சினைகளை சங்கத் தலைவர், பொதுச் செயலாளர் அல்லது சங்க நிர்வாகிகளில் யாரிடமாவது நேரடியாகத் தெரிவித்தால், அவற்றை உரிய முறையில் பரிசீலித்து, தீர்வு காணத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

இதுவரை சங்கம் இதே முறையில்தான் செயல்பட்டு வந்துள்ளது. இனியும் உறுப்பினர்களின் நலனை முன்னிறுத்தி, அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காண சங்கம் தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறியாளர்களுக்கு யாரால் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவோ, அவர்களிடமே உரிய முறையில் வலியுறுத்தி தீர்வு காண வேண்டும். அதைத் தவிர்த்து, சங்கத்தின் மீது கோபம் கொண்டு, சங்கத்தின் மீது பழி சுமத்துவது ஏற்புடையதல்ல.

எனவே, தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதைத் தவிர்த்து, பொறியாளர்களின் நலன் கருதி அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

பொதுப் பணி மாறுதல் தொடர்பான கோரிக்கைகள்:

பொதுப் பணி மாறுதல் தொடர்பாக பெருந்திரளான முறையில் முறையீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டபோதிலும், அதில் சொற்ப எண்ணிக்கையிலான பொறியாளர்களே கலந்து கொண்டனர். இந்நிலையில், நமது கோரிக்கைகளுக்கு அரசு எவ்வாறு செவிசாய்க்கும் என்பதை நாம் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியம். ஒரு பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல், அவர்களுக்காக மற்ற உறுப்பினர்களும் இணைந்து குரல் கொடுத்து, அவர்களுடன் நின்று செயல்பட வேண்டும்.

அதிகாரம் மிகவும் வலிமையானது. அந்த அதிகாரத்தைக் கேள்வி கேட்கவும், நமது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தவும், அதற்கேற்ற வலிமையான சங்கம் நமக்குத் தேவை. அந்த வலிமை நம்முடைய ஒற்றுமையிலிருந்துதான் உருவாகும். எனவே, நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும

நமது ஒற்றுமையே நமது பலம்:

ஒன்றுபட்ட செயல்பாட்டின் மூலமே நமது நியாயமான கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு வலுவாகக் கொண்டு சென்று, உரிய தீர்வைப் பெற முடியும்.

சங்கத்தின் நலன் மற்றும் எதிர்கால வளர்ச்சியை முன்னிறுத்தி, அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமை ஒருங்கிணைந்து செயல்படுவதே தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதாகும்.

நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க! **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!!**

நகல் :

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

(அரசாணை (நிலை) எண் 1814. பொது (பணிகள்) துறை, நாள் 21.05.1956-ல் ஏற்பு பெற்றது)

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792

மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com

வலைதளம் : www.tnhighwaysengineers.com

தலைவர்	பொதுச் செயலாளர்	பொருளாளர்
பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ.,	பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ.,	பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ.,
கைபேசி எண்: 88708 88918	கைபேசி எண்: 97517 04393	கைபேசி எண்: 98436 40475

கடித எண்.453/ 2026, **நாள்: 19.08.2026**

பெறுநர்

முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி,
சென்னை-25

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் - பொறியாளர்களுக்கான கோரிக்கைகள் - தொடர்பாக

வணக்கம்!

கீழ்க்கண்ட முக்கியமான கோரிக்கைகளைத் தங்களின் மேலான பார்வைக்கும், உரிய நடவடிக்கைக்கும் பணிவுடன் முன்வைக்கின்றேன்.

1. **துறை மறுசீரமைப்பு - பொதுப் பணிமாறுதல் மற்றும் விருப்ப மாறுதல்:**

   துறை மறுசீரமைப்பு 15.06.2026 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பல்வேறு பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களது குடும்பச் சூழ்நிலைகளுக்கு மாறாக நீண்ட தொலைவிலுள்ள இடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், கடந்த 8 ஆண்டுகளாக பொதுப் பணிமாறுதல் வழங்கப்படாததால், பொறியாளர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு, மிகுந்த மன உளைச்சலுடன் பணியாற்றி வருகின்றனர். எனவே, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பொதுப் பணிமாறுதல் மற்றும் விருப்பப் பணிமாறுதல்களை விரைவில் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

1. **உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வு - விதிமுறைகளைப் பின்பற்றுதல்:**
உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்விற்கான விதித் திருத்தம் 03.11.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், பதவி உயர்வுக்கான தகுதி மற்றும் காலிப்பணியிடங்களை நிர்ணயிக்கும் நடைமுறையில், நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு முரணாக எந்தவிதமான சிறப்புச் சலுகையோ அல்லது தளர்வோ வழங்குவது சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு முரணான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல், பதவி உயர்வுகள் அனைத்தும் விதிமுறைகளின்படி மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். விதிமுறைகளுக்கு மாறாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அதனை எதிர்த்து சங்கத்தின் சார்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. **அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல்:**
தலைமைப் பொறியாளர் முதல் உதவிக் கோட்டப் பொறியாளர் வரையிலான பல்வேறு நிலைகளில் உள்ள காலிப் பணியிடங்களை, தகுதியும் அனுபவமும் கொண்ட பொறியாளர்களைக் கொண்டு விரைவில் நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட முக்கிய கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதால், துறையின் அன்றாட நிர்வாகப் பணிகளிலும், பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளிலும் தொய்வும் காலதாமதமும் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் அரசின் நற்பெயருக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

3. **செயல்திறன் அடிப்படையில் பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உக்கடம் பாலம் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கை:**
மேற்கண்ட பணிகள் தொடர்பாக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சில பொறியாளர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. இதன் காரணமாக ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பணப் பலன்கள் கிடைக்காமல், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. மருத்துவச் செலவுகளைக் கூட மேற்கொள்ள முடியாமல் அவர்கள் மிகுந்த மனவேதனையுடனும் நிம்மதியற்ற நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். மேலும், உதவிக்

கோட்டப் பொறியாளர், கோட்டப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் ஆகிய பதவிகளுக்கான பதவி உயர்வை எதிர்பார்த்து நீண்ட காலமாகக் காத்திருக்கும் பொறியாளர்கள், ஓய்வு பெறும் வயதை நெருங்கியுள்ள நிலையில், இவ்வொழுங்கு நடவடிக்கைகளின் காலதாமதத்தால் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகியுள்ளனர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக துறையில் முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பொறியாளர்களின் பதவி உயர்வு வாய்ப்புகள் பாதிக்கப்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும். எனவே, இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண, உரிய அலுவலர்களைக் கொண்ட குழுவை அமைத்து, வழக்குகளை விரைந்து பரிசீலித்து தீர்வு காணுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

4. **உதவிப் பொறியாளர்களின் காலிப் பணியிடங்களை நிரப்புதல்:**

நெடுஞ்சாலைத்துறையில் 100-க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்கள் உள்ளதால், பணியில் உள்ள உதவிப் பொறியாளர்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்று அன்றாட பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பணிச்சுமை அதிகரித்து, பணிகளை திறம்படவும் உரிய காலக்கெடுவிற்குள் நிறைவேற்றுவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள உதவிப் பொறியாளர்களுக்கு அரசின் உரிய ஒப்புதலைப் பெற்று, பணி நியமன ஆணைகளை விரைவில் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

5. **புதிதாக உருவாக்கப்பட்ட அலுவலகங்களுக்கான அடிப்படை வசதிகள், நிதி ஒதுக்கீடு மற்றும் தற்களிய பணியாளர் ஏற்பாடு:**

புதிதாக உருவாக்கப்பட்ட மண்டலத் தலைமைப் பொறியாளர், வட்டங்கள், கோட்டம் உட்கோட்ட மற்றும் பிரிவு அலுவலகங்கள் முறையாகவும் திறம்படவும் செயல்படுவதற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கும், அலுவலகக் கட்டிடங்களுக்கான வாடகை மற்றும் முன்பணத் தொகையைச் செலுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கீட்டை துறையின் சார்பில் உடனடியாக வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இடமாற்றம் செய்யப்பட்ட உட்கோட்ட அலுவலகங்களில் உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்கள் போதுமான அளவில் இல்லை. இதன் காரணமாக, சாலைப் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள் மற்றும் சாலை

ஆய்வாளர்கள், பணி பதிவேடுகளைப் பராமரித்தல், சம்பளப் பட்டியல் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் உள்ளிட்ட அலுவலகப் பணிகளையும் கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான அலுவலகங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் கணிசமான எண்ணிக்கையில் காலிப்பணியிடங்கள் உள்ள நிலையில், புதிதாக உருவாக்கப்பட்ட அலுவலகங்களின் அன்றாட நிர்வாக மற்றும் தொழில்நுட்பப் பணிகளைச் சீராகவும் திறம்படவும் மேற்கொள்ளும் வகையில், தேவைக்கேற்ப Technical Assistant மற்றும் Computer Operator ஆகிய பணியாளர்களை, தற்போது நடைமுறையில் உள்ள SOR (Schedule of Rates) -ன் அடிப்படையில், நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி ஆன்லைன் டெண்டர் மூலம் ஈடுபடுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6. சாலை மற்றும் பாலங்கள் பராமரிப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு

நம்ம சாலை திட்டத்தின் கீழ் பராமரிக்க, ஒப்பந்தாரின் பராமரிப்பு காலம் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சாலைகளில் தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 2026-27ஆம் ஆண்டிற்கான நிதி இதுவரை ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது. இதனால், சாலைகளின் பராமரிப்புப் பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. சாலை பணியாளர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சாலைகளை தவிர்த்து மற்ற சாலைகளில் பராமரிப்பு பணி எவ்வாறு மேற்கொள்வது மற்றும் அதற்கான செலவினங்களை எவ்வாறு ஈடு செய்வது என்பது குறித்த தெளிவான வழி காட்டுதல்களையும் தெரிவிக்க கோருதல்.

எனவே, முதன்மை இயக்குநர் அலுவலகத்தின் மூலம் அந்தந்த மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கு தேவையான நிதியை உரிய முறையில் உடனடியாக ஒதுக்கீடு செய்து, பொதுமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தரமான சாலைகளை உறுதி செய்யும் வகையில், பராமரிப்புப் பணிகளை எவ்விதத் தொய்வுமின்றி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் **"பாலங்கள் பராமரிப்பு மாதம்"** கடைப்பிடிக்கப்பட்டு, பாலங்களின் நிலைமை ஆய்வு செய்யப்பட்டு தேவையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவது வழக்கமாகும். ஆனால், நடப்பு ஆண்டில் இதுவரை அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், பாலங்கள் தொடர்பான பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளன.

தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், கனமழை மற்றும் பெருவெள்ளம் ஏற்படும் போது, போதிய பராமரிப்பு இல்லாத சாலைகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்து, போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பும், சாலைப் போக்குவரத்தும் பாதிக்கப்படக்கூடும்.

எனவே, சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்புப் பணிகளுக்குத் தேவையான நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்து, அவசர மற்றும் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட கோரிக்கைகள் தொடர்பாக குறிப்பிட்ட 07.09.2026க்குள் உரிய பதிலும், நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத பட்சத்தில், உறுப்பினர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில், சங்கத்தின் சார்பில் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியான ஆர்ப்பாட்டம் அல்லது கவன ஈர்ப்பு போராட்டத்தை முதன்மை இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள் நடத்துவது குறித்து பொறியாளர்கள் உரிய முடிவு எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நடவடிக்கைகள் அனைத்தும் சட்ட விதிமுறைகளுக்கும், துறை சார்ந்த நடைமுறைகளுக்கும் உட்பட்டு, அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, இத்தகைய சூழ்நிலை ஏற்படாத வகையில், மேற்கண்ட கோரிக்கைகளுக்கு உரிய காலக்கெடுவிற்குள் தீர்வு காணுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

19.08.2026

பொதுச் செயலாளர்

Copy of

Association of Tamil Nadu Highway Engineers

Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956
'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

President	General Secretary	Treasurer
Er.S.RAMANATHAN, B.E.,	**Er.P.VEERAMANI,** M.E., M.B.A.,	**Er.S.THIYAGARAJA,** M.E.,
Mobile No.: 88708 88918	Mobile No.: 97517 04393	Mobile No.: 98436 40475

Letter No.450/ATNHE/2026 **dated 06.08.2026**

To

The Principal Census Officer,
Greater Chennai Corporation,
Ripon Building,
Chennai – 600 003.

Sir,

Sub: Representation on deployment of Assistant Engineers and Assistant Divisional Engineers of the Tamil Nadu Highways and Minor Ports Department as Enumerators/Supervisors for Census 2026–27 – Request for reconsideration – Reg.

Ref: The Census Act, 1948, and the relevant notifications issued by the Ministry of Home Affairs dated 31.12.1990 and 19.07.1994.

We sincerely appreciate the initiative of the Government of India in conducting the Census 2026–27 in accordance with the provisions of the Census Act, 1948, as amended.

We wish to submit that Assistant Engineers and Assistant Divisional Engineers of the Tamil Nadu Highways and Minor Ports Department have been assigned duties as Supervisors and Enumerators and have been directed to attend training programmes. It is observed that the communication regarding such deployment was issued directly to the individual officers, in several cases only one day prior to the training, without the knowledge or concurrence of the Head of the Department.

In this regard, we respectfully invite your kind attention to the provisions of the Census Act, 1948, and the notifications issued by the Ministry of Home Affairs dated 31.12.1990 and 19.07.1994. The Schedule/Table appended to the notifications specifies the categories of officials who may be appointed to various Census functions. For the posts of Enumerator and Supervisor, the prescribed categories include teachers, clerks, other officials, or any other suitable persons.

It is respectfully submitted that, under the established horizontal and vertical administrative hierarchy across Government departments, the posts of Assistant Engineer and Assistant Divisional Engineer are Gazetted engineering positions carrying higher technical and administrative responsibilities. As per the Tamil Nadu Revised Scales of Pay (7th Pay Commission Pay Matrix), Assistant Engineers and Assistant Divisional Engineers are placed in Pay Level 20 and Pay Level 22, respectively, which are comparable to or higher than several executive administrative posts, including that of Tahsildar.

In view of the above, we humbly request that Assistant Engineers and Assistant Divisional Engineers may kindly be exempted from deployment as Enumerators and Supervisors for Census operations.


We further submit that, in accordance with the provisions of the Census Act, 1948 and the notifications issued by the Ministry of Home Affairs, Enumerators and Supervisors may be appointed from among teachers, clerks, other officials, or any other suitable persons. In cases where there is a shortage of manpower, suitable persons available in the local area where the Census is to be conducted may also be considered for such appointments, as contemplated under the Act and the relevant Rules.

We therefore request your good office to kindly reconsider the deployment of Assistant Engineers and Assistant Divisional Engineers for Enumerator and Supervisor duties and issue suitable orders in accordance with the statutory provisions governing Census operations.

We shall be grateful for your kind consideration and favourable action.

Thanking you,

Yours faithfully,



General Secretary

05.09.2026 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள்

துணைத் தலைவர் பொறிஞர் சோ.பாண்டியன் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்

வ.எண்.	பதவி
1	பொறிஞர் அ.கிருஷ்ணன், துணைத் தலைவர்
2	பொறிஞர் ப.வீரமணி, பொதுச் செயலாளர்
3	பொறிஞர் ஜி.விஜயராகவன், செயலாளர்
4	பொறிஞர் சொ.தியாகராஜா, பொருளாளர்
5	பொறிஞர் பி.அசோக்குமார், செயற்குழு உறுப்பினர்
6	பொறிஞர் ஜி.முத்து முனி குமாரி, செயற்குழு உறுப்பினர்
7	பொறிஞர் சி.நடராஜன், செயற்குழு உறுப்பினர்
8	பொறிஞர் ஜெ.பிரேம் ஆனந்த், செயற்குழு உறுப்பினர்
9	பொறிஞர் ஆர்.ராஜா, செயற்குழு உறுப்பினர்
10	பொறிஞர் கே.ஸ்ரீராம், செயற்குழு உறுப்பினர்
11	பொறிஞர் டி.விவேகானந்தன், செயற்குழு உறுப்பினர்

செயற்குழுவில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மறைந்த செயற்குழு உறுப்பினர் **பொறிஞர் நெ.ஜாகிர் உசேன்** அவர்கள் குடும்பத்தினர் வேண்டுகோளுக்கு இணங்க உறுப்பினர்களிடம் நிதி வசூலித்து வழங்குவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது .

2. 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தை 17.10.2026 அன்று மதுரையில் நடத்துவதெனவும், அதனுடன் இணைந்து முன்னாள் நிர்வாகிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும், புதிதாகப் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களை வரவேற்கும் முப்பெரும் விழாவாக நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், விழாவிற்கான 17.10.2026, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை இறுதி செய்து, அனைத்து உறுப்பினர்களுக்கும் முறையான அறிவிப்பை (Notice) உடனடியாக அனுப்பி வைக்குமாறு பொதுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது..

3. 2012 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தகுதியான உதவிப் பொறியாளர்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பதவி உயர்வை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், அரசின் நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு, 3:1 விகிதாச்சார அடிப்படையில் உதவிக் கோட்டப் பொறியாளர் (Assistant Divisional Engineer) பதவி உயர்வு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை சங்கத்தின் செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

4. செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மற்றும் உக்கடம் மேம்பாலம் தொடர்பாக நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக உரிய விளக்கங்களைப் பெற்று, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

5. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நிதி ஒதுக்கீடு செய்தல் கோட்ட வரைவாளர், கண்காணிப்பாளர் மற்றும் தற்காலிக பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

6. மாநிலத்தில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களின் சீரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு தேவையான உரிய நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்து வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

7. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் (HRS) தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின்கீழ் இயங்கும் AE (QC), ADE (QC) மற்றும் DE (QC) ஆகிய அலுவலர்கள் சமர்ப்பிக்கும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளுடன் (Monthly Progress Reports) இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் குறித்த அறிவுறுத்தல்கள் விவாதிக்கப்பட்டு, நடைமுறைக்கு சாத்தியமான IDS GO.323-ன்படி தெளிவுரைகளைப் பெற நடவடிக்கை எடுக்க இயக்குநர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

8. துறை மறுசீரமைப்பினால் (Departmental Reorganisation) ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள், குறைபாடுகள் மற்றும் சிரமங்களை நிவர்த்தி செய்ய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

9. உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு Permanent Imprest மற்றும் Temporary Imprest தற்போது நடைமுறையில் இல்லாததால், அவர்கள் மேற்கொள்ளும் Petty Expenses-க்கான தொகையை பட்டுவாடா செய்வதற்கு புதிய வழிவகை ஏற்படுத்த வேண்டும் என செயற்குழு வலியுறுத்துகிறது. இதனால், அத்தியாவசியப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடியாமல் ஏற்படும் தாமதத்தின் காரணமாக, துறைக்கும் அரசுக்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் நிலை உருவாகக்கூடும்.

10. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் -II அலகினை ஒப்படைப்பு செய்து தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் உடன் இணைப்பதாக தெரிய வருகிறது. அரசின் நிரந்தர

பணிகளை மறுபணியமர்வு மூலமாக துறையை விரிவாக்கம் செய்ய வேண்டுமெனவும் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கு அயற்பணியின் மூலம் துறையில் உள்ள பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்த வேண்டுமென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது .

11. சாலைகள் மற்றும் பாலங்களை முறையாகப் பராமரிப்பதற்காக, ஒவ்வொரு 8 கி.மீ. சாலைக்கும் 2 சாலைப் பணியாளர்களும், ஒவ்வொரு 25 கி.மீ. சாலைக்கும் 1 சாலை ஆய்வாளர் அல்லது திறன்மிகு உதவியாளரும் பணியமர்த்தப்பட வேண்டிய நடைமுறை உள்ளது. ஆனால், தற்போது பெரும்பாலான இடங்களில் மேற்கண்ட பணியிடங்கள் காலியாக உள்ளதால், சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்புப் பணிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிப்பதற்கான உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதிகளை விரைந்து வழங்கிட, முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

12. பொது மாறுதல் (General Transfers) மற்றும் விருப்ப மாறுதல் (Willing Transfers) கோரி விண்ணப்பித்துள்ள பொறியாளர்களின் கோரிக்கைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதால், அவர்களின் பணித் திறனும் மன அமைதியும் பாதிக்கப்படுகின்றன என்பதை இச்செயற்குழு சுட்டிக்காட்டுகிறது. எனவே, நிலுவையில் உள்ள அனைத்து மாறுதல் விண்ணப்பங்களையும் உடனடியாகப் பரிசீலித்து, எவ்வித காலதாமதமுமின்றி தகுதியான பொறியாளர்களுக்கு மாறுதல் ஆணைகளை (Transfer Orders) விரைந்து வெளியிட வேண்டும் என செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

13. துறை மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சமநிலையின்மைகளைச் சரிசெய்வதற்கும், உறுப்பினர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளைப் பெற்று, அவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கும் கீழ்கண்ட நிர்வாகிகளைக் கொண்ட குழு அமைக்கப்படுகிறது:

1. பொறிஞர் ஜி.குரு - சென்னை மண்டலம்
2. பொறிஞர் சி. நடராஜன் - திருச்சி மண்டலம்
3. பொறிஞர் க.மோகன்ராஜ்- கோவை மண்டலம்
4. பொறிஞர் கோ.முத்துமுனிகுமாரி - மதுரை மண்டலம்

14. தற்போது செயற்குழுவில் காலியாக உள்ள செயற்குழு உறுப்பினர் பதவிக்கு, சங்க விதிமுறைகளின்படி 9(iii) பொறிஞர் எம். கே. சரவணன், உதவிக் கோட்டப் பொறியாளர்,

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கும்மிடிபூண்டி அவர்களைச் செயற்குழு உறுப்பினராக ஒருமனதாகத் தேர்வு செய்து நியமிக்கலாம் எனச் செயற்குழு தீர்மானிக்கிறது.

15. பொறிஞர் சே. இராமநாதன் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து விலகியதை செயற்குழு வருத்தத்துடன் ஏற்றுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், அடுத்த தலைவரைத் தேர்வு செய்வது தொடர்பாக அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

16. உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 10 ஆண்டுக்கு மேல் அப்பதவியில் பணிபுரிந்துள்ளனர் அவர்களுக்கு அப்பதவியில் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாமல் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. அதற்கு தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி செயற்குழு கேட்டுக் கொள்கிறது

17. உதவிப் பொறியாளர்களின் பணித்தளம் மற்றும் அலுவலகம் சார்ந்து தற்போது நிலவிவரும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் சிரமங்களுக்குத் தீர்வு கோரி, மண்டல வாரியாகத் தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், மாவட்டக் கிளைக் கூட்டம் மூலம் தீர்மானம் நிறைவேற்றி தலைமைச் சங்கத்திற்கு தெரிவித்தப் பின்னர் கவன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்றும் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

18. பொறியாளர்களின் குறைதீர்க் கூட்டம் காலாண்டுக்கு ஒருமுறை கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் மூலம் நடத்தப்பட வேண்டும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

19. நெடுஞ்சாலைத்துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் பணிபுரியும் உதவிப் பெறியாளர்களுக்கு தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி தள ஆய்வு செய்ய போதுமானதாக இல்லை என்பதால் பிற அலகுகளில் உள்ளது போன்று பயணப்படி வழங்க முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி செயற்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும், வட்ட அலுவலகம் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகம் செல்வதற்கு அதிகார எல்லைக்கு வெளியே (outside jurisdiction) வழங்கும் பயணப்படியை சேர்த்து வழங்க வேண்டும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

ஒம்/-
துணைத்தலைவர்

ஒம்/-
பொதுச் செயலாளர்

SSOCIATION OF TAMIL NADU HIGHWAY ENGINEERS
35V, TALUK OFFICE ROAD, SAIDAPET, CHENNAI - 600 015

Auditor Reports 2025 -2026

R.Govindan & Co

Chartered Accountants

AA-151 [UPSTAIRS], III AVENUE,
ANNA NAGAR, CHENNAI -600040.
E-Mail: rgovindan.co@gmail.com
caoffice1995@gmail.com
Ph: 044-26201728, Mob:9444011886

AUDITORS REPORT TO THE MEMBERS OF M/S.ASSOCIATION OF TAMILNADU HIGHWAYS ENGINEERS , CHENNAI. 15, 35V, TALUK OFFICE ROAD, SAIDAPET, CHENNAI- 600 015.

We have audited the attached Balance Sheet of M/S.ASSOCIATION OF TAMILNADU HIGHWAYS ENGINEERS, 35V Taluk Office Road, Saidapet, Chennai – 600 015., as at 31st MARCH 2026 and the Income And Expenditure Account for the Year ended 31st MARCH 2026:

a. We have obtained all the information & Explanations which to the best of our knowledge and belief were necessary for the purpose of our audit.
b. Proper books of accounts as per generally accounting practice have been kept by the Society as far it appears from the examination of such books.
c. The Balance Sheet and the Income and Expenditure Account referred to in this report are in agreement with the books of accounts.
d. In our opinion and to the best of our information and according to the explanations given to us the said Balance Sheet and Income And Expenditure Account read with notes there on give a true and fair view.

1. In so far as it relates to the Balance Sheet of the State of Affairs of the Trust as at 31st MARCH 2026.
2. In so far as it relates to the Income and Expenditure Account, Excess of Expenditure over Income of the Trust for the year ended on 31st MARCH 2026

For R.GOVINDAN & CO.,
CHARTERED ACCOUNTANTS

R. Govindan

(R.GOVINDAN)
Partner

Place : Chennai – 40

UDIN NO: 26202933CNXSPW7189

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAYS ENGINEERS

HIGHWAYS ENGINEERS' HOME

Regd No.35V, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015

BUILDING FUND

BALANCE SHEET AS ON 31st March 2026

LIABILITES		AMOUNT in RS.	ASSETS		AMOUNT in RS.
Excess of Income over Expenditure			FIXED ASSETS		
Opening Balance	27,50,339.25		As per Schedule-A		52,29,324.98
add: Excess of Income over Expenditur	540823.60	32,91,162.85	LOANS & DEPOSITS		
			Staff Advance		24,000.00
			Mess Advance		19,000.00
SPECIAL SUBSCRIPTION FROM MEMBERS			TNEB Deposit		1,010.00
Opening Balance	6540682.20		Telephone Deposit		8,000.00
Add: Current Year Subscription	2,74,000.00	68,14,682.20	TDS		8,942.00
			Loan to General fund		400000.00
CURRENT LABILITIES & PROVISIONS			CURRENT ASSETS		
Audit Fees payable		10000.00	Cash in Hand	3,299.00	
			Cash at Bank-State bank of india	4422269.07	
			Cash at MOD SBI		44,25,568.07
Total		**1,01,15,845.05**	**Total**		**1,01,15,845.05**

Place : Chennai
Date:12/08/2026
UDIN : 26202933CNXSPW7189

TREASURER **GENERAL SECRETARY**

TO BE READ WITH OUR REPORT OF EVEN DATE
R.GOVINDAN & CO
CHARTERED ACCOUNTANTS

Partner

R. GOVINDAN & CO. CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAYS ENGINEERS

Regd No. 35V, Taluk Office Road, Saidapet, Chennai - 600015

BUILDING FUND

SCHEDULE - A:

FIXED ASSETS - DEPRECIATION STATEMENT

Sl NO	Name of the Assets	Balance On 01.04.2025	Additions		Deletions	Total	Rate	Depreciation	W D V as on 31.03.2026
			> 180 Days	< 180 Days					
1	Buildings	5057482.6			-	50,57,482.60	10%	5,05,748.00	45,51,734.60
2	Electrical Items	77137	-	-	-	77,137.00	15%	11,571.00	65,566.00
3	Furniture & Fittings	219194.38	-	-	-	2,19,194.38	10%	21,919.00	1,97,275.38
4	Offic Equipments	464087	-		-	4,64,087.00	15%	69,613.00	3,94,474.00
5	Airconditioner	23853				23,853.00	15%	3,578.00	20,275.00
	Total	58,41,753.98	-	-		58,41,753.98		6,12,429.00	52,29,324.98

R. GOVINDAN & CO. CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

TREASURER,
Association of Tamilnadu
Highways Engineers
35V, Taluk Office Road,
Saidapet, Chennai - 15.

GENERAL SECRETARY
Association of Tamilnadu
Highways Engineers
35V, Taluk Office Road,
Saidapet, Chennai - 15.

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAYS ENGINEERS

HIGHWAYS ENGINEERS' HOME

Regd No.35V, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015

BUILDING FUND

INCOME AND EXPENDITURE FOR THE YEAR ENDED 31stMarch 2026

Expenditure	Amount Rs	Income	Amount Rs
To Repairs and Maintenace		By Building Fund	3966750.00
" Cable TV Charges	51,480.00		
" Building Maintenance	5,00,193.00	BY Interest Accrued from SBI Surabi Sweep	1,72,415.00
" News Papers Expenses	8,080.00		
" Salary & Wages	14,13,075.00		
" Bonus	1,19,175.00		
Generator Expenses	7,392.00		
" Staff welfare	86,649.00		
" Electricity Charges	5,43,298.00		
" Metro water charges	-		
" Bank Charges	3,390.40		
" Legal Fee	-		
" Audit fees	13,000.00		
" Airconditioner charges (revenue)	2,40,180.00		
" Depreciation	6,12,429.00		
" Excess of Income over Expenditure	5,40,823.60		
Total	**41,39,165.00**	**Total**	**41,39,165.00**

Place : Chennai
Date:12/08/2026
UDIN : 26202933CNXSPW7189

TREASURER **GENERAL SECRETARY**

R. GOVINDAN & CO. CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

TO BE READ WITH OUR REPORT OF EVEN DATE
R.GOVINDAN & CO
CHARTERED ACCOUNTANTS

Partner

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAYS ENGINEERS

HIGHWAYS ENGINEERS' HOME

Regd No.35V, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015

BUILDING FUND

RECEIPTS AND PAYMENTS FOR THE YEAR ENDED 31st March 2026

Receipts	Amount Rs	Payments	Amount Rs
To Opening Balance	0	By Repairs and Maintenances	
		" staff welfare	86,649.00
		" Office Appliances-Generator exp	7,392.00
		" Building Maintenances	5,00,193.00
Cash in hand	667.05	" Metro water charges	-
Cash at Bank	2996648.42	" Audit Fees	10,000.00
" Building Fund-Donation	3966750	" News Papers Expenses	8,080.00
" Building Fund-subscription	274000	" Salary and Wages	14,13,075.00
Interest	172415	" Bonus	1,19,175.00
Mess advance recovery	0	" Electricity Charges	5,43,298.00
Staff advance Recovery	14000	" Bank Charges	3,390.40
		" Staff Advance	16,000.00
		" Legal Fee	-
		" Milk and Sugar Charges Charges	-
		" Loan to general Fund	-
		" Cable TV Charges	51,480.00
		" Airconditioner charges	2,40,180.00
		" Closing Balances	
		Cash in hand	3,299.00
		Cash at Bank-State bank of india	44,22,269.07
Total	**74,24,480.47**	**Total**	**74,24,480.47**

Place : Chennai
Date:12/08/2026
UDIN : 26202933CNXSPW7189

TREASURER **GENERAL SECRETARY**

TO BE READ WITH OUR REPORT OF EVEN DATE
R.GOVINDAN & CO
CHARTERED ACCOUNTANTS

R. Govindan

Partner

R. GOVINDAN & CO. CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS

ASSOCIATION OF TAMIL NADU HIGHWAYS ENGINEERS

HIGHWAYS ENGINEERS ' HOME
Regd No.35V, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015
GENERAL FUND
BALANCE SHEET AS AT 31st March 2026

LIABILITES		AMOUNT Rs.	ASSETS	AMOUNT Rs.
Membership Fund		1454100	FIXED ASSETS	
			As Per Schedule A	16,527.00
Income and Expenditure Account bal				
Opening Balance	(77,97,417.50)		INVESTMENTS	
Add: Excess of Expenditure over Income-General Fund	(7,63,050.00)		FDR No.X309961	1,04,385.00
Less: TDS	(37,466.00)		FDR No.X309962	98,443.00
		(85,97,933.50)	**FDR No W308685**	3,35,339.00
			FDR No W308684	8,10,346.00
			FDR No W308678	3,47,747.00
UN SECURED LOANS			TDS 25 26	41,876.00
